மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) திருவட்டார்—மூவாத்துமுகம் சாலையை மேம்படுத்தும் பணியையும், மூவாத்துமுகம் என்னுமிடத்தில் பாலம் கட்டும் பணியையும் ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டில் 17—2—1978 முதல் எடுத்து செயலாற்றப்பட்டு வருகிறது.

(துணை வினா இல்லை)

செங்கமடுகு அணைத் திட்டம்

* வினா 34—திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் வேப்பனப்பள்ளி ஒன்றியத்தைச் சேர்ந்த செங்கமடுகு (சிங்காரப்பள்ளி) அணை கட்டுவதற்கான மதிப்பீடு போடப்பட்டதா?

(ஆ) அப்படியானால் அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) நடப்பாண்டில் இத் திட்டத்தை அரசு நிறைவேற்ற உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 202 இலட்சங்களாகும்.

(இ) இத் திட்டம் புலனாய்வு தலைமைப் பொறியாளரால் பரிசீலிக்கப்படுகிறது. அவரது அறிக்கை கிடைத்த பின் நிறைவேற்ற இவ்வரசு முடிவெடுக்கும்.

(முற்பகல் 9-40)

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டம் உடனடியாக செயல்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதி மிகவும் வாட்சியான பகுதியாகும். குறிப்பாக வேப்பனப் பள்ளிப் பகுதி மிகவும் வரட்சியான பகுதியாகும். ஆகவே இந்தத் திட்டத்தை விரைவில் செயல் முறைக்குக் கொண்டு வர முயற்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1978 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே பொறியாளர் அறிக்கை வந்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

நெய்வேலியில் நிலத்தடி நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தல்.

* வினு 35—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் தோண்டுவதால் சேதமாகும் நிலத்தடி நீரைச் சாகுபடிக்குப் பயன்படுத்துவது குறித்து அரசு ஆராய்ந்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுவதால் கிடைக்கும் மொத்த நில நீர் இருப்பு பற்றி ஆய்வதற்கும், அதன் பின் அப்பகுதியில் பாசனம் மற்றும் சென்னை நகர குடிநீர் தேவை இவற்றைக் கருத்திற்கொண்டு மேற்கண்ட மிகுதி நில நீரைச் சரிவரப் பயன்படுத்தும் முறையைக் கண்டு, 6 மாத காலத்திற்குள் பரிந்துரையை அனுப்பவும், தமிழக அரசு மார்ச்சு திங்களில் ஒரு தனிக்குழு அமைத்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த இரண்டாவது சுரங்கம் தோண்டுவதன் அடிப்படையில் அங்கே கிடைக்கின்ற நீரை சென்னைக்குக் குடிநீராக உபயோகப்படுத்துவதற்கான திட்டத்தில் அரசு ஈடுபட்டிருக்கிறது. அவ்வாறு திட்டமிடப் பட்டிருப்பது எந்த வகையில் நிறைவேற்றபடவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அந்தத் தண்ணீரை வேளாண்மைக்குப் பயன்படுத்தப்போவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி வேளாண்மைக்குப் பயன்படுத்துவதாக இருந்தால் எவ்வளவு ஏக்கர் நிலத்திற்கு அதன் மூலம் பாசன வசதி கிடைக்கும் என்பதை அறியவிரும்புகிறேன்.